ஆனால், இன்றைக்கு வெளியேறுங்கள் என்று நான் ஒன்றுக்கு மூன்று முறை கட்டளையிட்டும்கூட, வெளியேறாமல் எதிர்க் கட்சித் தலைவரே பிடிவாதம் பிடித்து பேரவையின் நடவடிக் கஞக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற முயற்சியிலே ஈடுபட்டது மிகவும் கண்டனத்திற்குரியது. அப்படிக் கண்டனத்திற்குரிய காரியத்தை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், ஒன்றுக்கு மூன்று முறை செய்திருக்கிற காரணத்தால் பேரவை விதி 120-இன்படி "The Speaker may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House and any member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the day's meeting." என்று இருக்கிறது. "If any member is ordered to withdraw a second time in the same session, the Speaker may direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session". என்று இருக்கிறது.

எனவே, அந்தப் பேரவை விதி 120—இன் கீழ் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியத்தையும், இன்று அவையிலே இருந்த காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரையும், பேரவையின் இந்தக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும், பேரவையில் கலந்து கொள்ளக் கூடாது; பேரவையிலேயிருந்து தள்ளிவைக்கப்படு கிறார்கள் என்கிற அறிவிப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கவன ஈர்ப்பு

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் யூனியனில் ஆதிதிராவிட மக்களின் விளை நிலங்களை இறால் மீன் வளர்க்க ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

திரு. ஆ. பாலையா, அவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக் கிறார்.

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. து. மூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''நாகை காயிதேமில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அடங்கியுள்ள கொள்ளிடம் யூனியனில் உள்ள ஆதிராவிட மக்களின் விளைநிலங்களை இரால் மீன் வளர்க்க ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து''

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சீர்காழி தொகுதியிலுள்ள காட்டூர், அம்மங்காடு, மகேந்திரப் பள்ளி, அப்புராயபுரம் ஆகிய கிராமங்களில் இரால் வளர்ப்பு இடங்கள் கொள்ளிடம் ஆறு மற்றும் அதன் உப்பனாறு அருகாமையில் அமைந்துள்ளன. இவ்விடங்கள் ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பிற்கு மிக அருகாமையில் உள்ளன. இங்குள்ள ஆதிதிராவிட மக்கள் விவசாய கூலிகளாக வேலை பார்த்து வந்துள்ளார்கள். இவர்களுக்கு சொந்தமான விளை நிலங்கள் எதையும் இரால் வளர்ப்பிற்கு ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மேற்குறிப்பிட்ட இடங்கள் கடந்த சில ஆண்டுகளாக உவர் நீர் பாதிப்பால் தரிசு நிலங்களாக உள்ளன. இரால் வாளர்ப்பின் மூலம் பெருமளவில் அன்னிய செலாவணி ஈட்டிடும் வாய்ப்புள்ளதால் இரால் வளர்ப்பினை தனியார்கள் மேற்கொள்ள அரசு ஊக்கம் அளித்து வருகிறது. எனவே இப்பகுதியில் தனியார் பட்டா நிலங்களில் இரால் வளர்ப்பு குளங்களை அமைத்து இரால் வளர்க்க முற்பட்டு வருகின்றன. தனியார் இவ்வாறு இரால் வளர்ப்பு குளங்கள் அமைத்து இரால் வளர்ப்பதால் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் சமுதாய

பிரச்சனைகள் குறித்தும் இப்பகுதி மக்கள் அச்சப் கொண்டு தக்க பாதுகாப்பு கோருகின்றனர். கிராமங்களுக்கு அருகாமையில் உவர்நீர் பண்ணைகள் அமைப்பதால் உவர்நீர் கசிவின் காரணமாக குடிநீர் பாதிக்கப்படும் என்றும் விவசாய கூலி வேலை பார்த்து வருவதால் விவசாய வேலையின்றி வருமானம் கிடைக்காமல் போகும் எனவும் அஞ்சுகின்றனர். தற்போதுள்ள விவசாய விளை நிலங்களை இரால் வளர்ப்புக்கு மாற்றம் செய்திடக்கூடாது எனவும் கருதுகின்றனர். இது பற்றி பட்டுக் கோட்டை உவர்நீர் மீன்துறை உதவி இயக்குநர் நேரில் சென்று விசாரணை நடத்தினார். விசாரணையின் போது இப்பகுதி மக்கள் இரால் வளர்ப்பு குறித்து தங்களது மேற்கண்ட அச்சத்தினை தெரிவித்தனரேயன்றி அதன் காரணமாக கிராமங் களில் பதட்ட நிலைமை நிலவுவது குறித்து ஏதும் தெரிவிக்க வில்லை. பதட்ட நிலைமை ஏதும் காணப்படவில்லை.

மேற்கண்ட கிராமங்களில் ஆதிதிராவிட மக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்து உரையாடி, பின்னர் தேவையான நடவடிக்கை பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதி, கொள்ளிடம் யூனியன் பகுதியில் அடங்கியுள்ள காட்டூர், அம்மங்காடு, மகேந்திர பள்ளி, அப்புராயபுரம் போன்ற கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். தற்சமயம் அங்கு இறால் பண்ணை வைத்து இறால் வளர்ப் பதால், அவர்கள் தற்போது பார்த்துக் கொண்டிருக்கும் கூலி வேலை இல்லாமல், போய்விடுமோ என்று அஞ்சுவதோடு, அவர் கள் வளர்க்கின்ற தென்னை மரம், அருந்துகின்ற குடிநீர் போன்றவைகள் உப்பு நீரால், அக்கிராமங்களில் வசிக்க முடி யாமல், பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிறார்கள். கடந்த மாதத்தில் இறால் பண்ணை வைக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென்று கூறி இருந்தார்கள். என்னிடம் வந்து முறை யிட்டார்கள். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், அங்கே இறால் பண்ணையை வைத்து விட்டால், அங்கே இருக்கிற ஏழை ஆதி திராவிட மக்களை, அந்தப் பண்ணையிலே வேலை கொடுக்க உத்தரவுகள் அளிக்கவும் அவர்கள் குடியிருக்கிற இடங்களில் குடிநீர் பாதிக்கப்படாமல் இருக்கவும். கடல் நீரால் பாதிக்கப்படாமல் இருக்கவும். மேலும் அவர்கள் இருக்கிற இடங்களில் சுற்றுப்புறச் சூழ்நிலை கெட்டுப் போகாமல் இருக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்பைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கு தமிழகத்திலே அவற்றை வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. கடற்கரையோரங்களில்தான் இதை வளர்க்கக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், கடற்கரை ஓரங்களிலுள்ள நிலங்கள் நமக்கு மிக்வும் அவசியமானதாக இருக்கிற பட்சத்தில், இன்றைக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில்கூட, இறால் வளர்ப்பிலே அதிகமான அளவுக்கு ஈடுபட்டுக் கொண்டு, அதன் அடிப்படையிலே வளர்ந்து விட்ட அந்த 'டெக்னாலஜி'யைக் கொண்டு, இங்கு தமிழகத்திலேயும் செயல்படுவதற்கு, நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆசியாவிலே இல்லாத அளவுக்கு தர்வைகுளத்தில் முதலிலே 'அக்வா—கல்ச்சர்' எஸ்டேட் என்று சொல்லக்கூடிய இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிற சூழ்நிலையில், அதனை படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டைகள் அமைக்கக்கூடிய ஒரு பரிசீலனை, அரசினுடைய ஆய்விலே இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலே ஆதிதிராவிட மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையிலே அங்கே அமைக்கப்படுகிற பண்ணைகளில் எல்லாம் மீனவர்கள், மீனவ கைம்பெண்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அறிக்கைகள்—அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழு அறிக்கைகளை அளித்தல், செல்வி எல். சுலோசனா, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 107—வது, 108—வது, 109—வது, 110—வது, 111—வது மற்றும் 112—வது வரையிலான ஆறு அறிக்கைகயைப் பேரவைக்கு அளிக்கிறேன்.